[25th September 1958

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) There are 44 villages in Nannilam taluk and 69 villages in the Nagapattinam taluk for which panchayats have not yet been constituted.

(*b*) Action is being taken by the Regional Inspector and the District Panchayat Officer concerned to constitute panchayats for the above villages.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பஞ்சாயத்துக்களின் கீழ் இருக்கும் சில கிராமங்களில் ஒரே தெருவில் உள்ள இரண்டு சாரிகளில் ஒரு சாரி ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொரு சாரி வேறொரு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. இதன் காரணமாக ஒரே தெருவில் இரண்டு பஞ்சாயத்துக்கள் இயங்குகின்றன. இதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தக் குறையை அரசாங்கம் நீக்குமா ? மேலும், ஒரு பஞ்சாயத்தில் 1,500-க்கு அதிகமான வோட்டர்களும் மற்றொரு பஞ்சாயத்தில் 1,000-க்கும் குறைவான வோட்டர்களும் இருக்கிறார்கள். இம்மாதிரி, பஞ்சாயத்துக்களிடையே சமத்துவமின்மை இருக்கிறது. இந்தக் குறையை நீக்கி பஞ்சாயத்துக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பஞ்சாயத்துக்களை ஒழுங்காக அமைப்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். பஞ்சாயத்து அமைப்பில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை சர்க்காருக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

Roads under National Extension Service Scheme

* 519 *Q.*—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any intention of acquiring lands for laying roads under the National Extension Service Scheme, if the owner of the land belongs to a neighbouring village, has no use for the land and refuses to part with it?

THE HON. SRI C. SUBRAMANIAM : When the land owners refuse to part with voluntarily lands required for a public purpose, lands are being acquired under the Land Acquisition Act. No other proposal is before the Government.

SRI V. K. KOTHANDARAMAN : பொது ரோடுகளே 25 அடி அகலம் கொண்டவையாக இருக்கும்போது, போக்குவரத்து குறைவாக இருக்கும் கிராமங்களில் 36 அடி அகல ரோடு போட முயற்சிக்கப்படுகிறது. கிராமங்களில் அவ்வளவு அகல ரோடு போடுவதற்கு போதிய இடம் இல்லாததால்தான் கிராமங்களில் ரோடுகள் போடப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? எனவே கிராமங்களில் அந்த அளவில் பாதி அளவு அகலமுள்ள ரோடுகளைப் போடுவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பின்னர் ஏற்படக்கூடிய அவசியத்தையும் யூகித்து முன் ஜாக்கிரதையாக போதிய அகலமுள்ள ரோடுகளை அமைத்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம். இப்போது அகலக் குறைவான ரோடுகளைப் போட்டுக்கொண்டுவிட்டு பின்னர் கஷ்டப்படுவதைவிட, இப்போதே சிறிது கஷ்டப்பட்டு சற்று அதிக அகலமுள்ள ரோடுகளைப் போடுவதற்குத் தடையாக இருக்கும் குறைகளை நீக்குவதற்கு முன்வருவது தான் தேவலை என்று எனக்குத் தோன்றுகிறது.